www.Padasalai.Net www.TrbTnpsc.com

V6T

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2023

-----

வகுப்பு 6

காலஅளவு: 2.00 மணிநேரம் | தமிழ் | மதிப்பெண்கள்: 60

பகுதி - I

அ) சரியான விடையைத் தேர்வுசெய்க. 10×1=10

1) சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) சிறப்பு உடையார் ஆ) சிறப்புடையார்

இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார்

2) மெல்லினத்திற்கான இன எழுத்து இடம் பெறாத சொல் ...........

அ) மஞ்சள் ஆ) வந்தான் இ) கல்வி ஈ) தம்பி

3) பொங்கல் + அன்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........

அ) பொங்கலன்று ஆ) பொங்கல்அன்று

இ) பொங்கலென்று ஈ) பொங்கஅன்று

4) ஆராயும் அறிவு உடையவர்கள் .......... சொற்களைப் பேசமாட்டார்கள்.

அ) உயர்வான ஆ) விலையற்ற

இ) பயன்தராத ஈ) பயன்உடைய

ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக

5) குழந்தைகள் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்க ............. அறிமுகப்படுத்தினார்.

6) வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் ............

இ) பொருத்துக

7) மணல் - கடல்

8) புயல் - கப்பல்

9) கலம் - பஞ்சுமெத்தை

10) ஆழி - ஊஞ்சல்

பகுதி - II

ஈ) ஓரிரு சொற்களில் விடையளிக்க. 5×2=10

(ஏதேனும் ஐந்து வினாக்கள் மட்டும்)

11) நாம் யாருடன் சேரக்கூடாது?

12) சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?

13) எப்படி உண்பது விரும்பத்தக்கது அன்று?

14) காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?

15) இன எழுத்துகள் என்றால் என்ன?

16) போகிப்பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?

17) மீனவர்கள் தமது வீடாகவும் செல்வமாகவும் கருதுவன யாவை?

உ) ஓரிரு தொடர்களில் விடை தருக. (ஏதேனும் மூன்று வினாக்கள் மட்டும்) 3×4=12

18) பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் எவை?

19) கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?

20) காணும் பொங்கல் எவ்வாறு மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கிறது?

21) ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



22) காமராசரின் கல்விப் பணிகள் குறித்து எழுதுக.

23) தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான்?

## பகுதி - III

**ஊ) பின்வரும் கவிதைப் பகுதியை அடி பிறழாமல் எழுதுக.** **4+2=6**

24) 'மன்னனும் மாசற' எனத் தொடங்கும் மூதுரை பாடலை எழுதுக

25) 'வெள்ளத்து' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பகுதி - IV

**எ) பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் ஐந்து வினாக்கள் மட்டும்)** **5×2=10**

26) **இருபொருள் தரக்கூடிய சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்கள் அமையுங்கள்.**

மாலை

27) **முறை மாறியுள்ள சொற்களைச் சரியான இடத்தில் பொருத்திச் சொற்றொடரை நிறைவு செய்க.**

அ) முளையிலே விளையும் தெரியும் பயிர்

ஆ) ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை

28) **தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.**

அ) எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின

ஆ) தேர்த் திருவிலாவிற்குச் செண்றனர்.

29) **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

அ) சிரம் என்பது ........... (தலை / தளை)

ஆ) வண்டி இழுப்பது .......... (காலை / காளை)

30) **கலைச்சொல் தருக.**

அ) Merchant

ஆ) Escalator

31) **அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தக்க இடத்தில் சேர்த்து எழுதுங்கள்.**

அ) நீங்கள் வரும்போது எனக்குப் புத்தகம் வாங்கி வாருங்கள். (ஒரு)

ஆ) நான் சொன்ன வேலையை அக்கறையுடன் செய்திருக்கிறார்கள். (மிகுந்த)

32) **இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் ஊக்கம்

அசைவுஇலா உடையான் உழை

www.Padasalai.Net

## பகுதி - V

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு விடை அளிக்க.** **1×6=6**

33) மாமல்லபுரத்தில் அர்ச்சுனன் தபசுப் பாறையில் உள்ள சிற்பங்களைப் பற்றி எழுதுக.

34) அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

## பகுதி - VI

**ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு விடை அளிக்க.** **1×6=6**

35) பிறந்தநாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

36) **கீழ்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

பொங்கல் திருநாள்

- - - - - - -

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com